**மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு – 2010**

---

## 1. கணக்குகள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இல 18 இன் பிரகாரம், சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்படுகையில் உரிய சொத்துக்களுக்கு உரித்தான சொத்து வகை முழுதும் மீள்பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் அண்டின் போது வாகனங்கள் மீள்பெறுமதியிடப்படுகையில் இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 2,101,595 தொகையும் ரூபா 821,033 தொகையும் மீள்பெறுமதியீட்டு ஒதுக்கத்திலிருந்து, செயற்பாட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்கப் பிரிவின் பயிற்சி நிறுவகத்திற்காக ரூபா 6,156,450 தொகையான நிதி உதவி வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் ரூபா 5,720,771 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 435,634 ஆல் செலவினம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,963,175 இல் ரூபா 1,877,605 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 85,570 தொகை பெறவேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை தொழிற்பயிற்சி அதிககாரசபைக்கு ரூபா 3,360,399 வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 1,945,811 செலவிடப்பட்டிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 1,414,588 தொகை பெறவேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட துணைப் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்ட 2 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் இடையே ரூபா 2,366,196 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**1.2.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டு முதல் அரசாங்க நிறுவகம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 120,000 முற்பண மீதி அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் போது சேவையில் இருந்து விலக்கிய ஓர் உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 58,445 தொகையான 02 கடன்மீதிகளும் ரூபா 300 தொகையான விழா முற்பணக் கணக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தினால் நிலுவையாகக் காணப்பட்டது.

### 1.2.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் அவை ஒவ்வொன்றிற்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| மாணவர் முன்னேற்ற அறிக்கைப் புத்தகங்கள் | 109,708 | மீதிகளின் உறுதிப்படுத்தல்<br>பட்டோலைகள்<br>மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| கடன்பட்டோர் | 568,305 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| தேசிய தொழிற்திறன் நியமம் | - | இருப்புப் பதிவேடு<br>பட்டோலைகள்<br>மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை நாட் கொடுப்பனவு | 50,000 | கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டோலைகள் |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 120,000 | மேற்படி |
| பயிற்சிப் படிப்பணம் | 17,000 | மேற்படி |
| போக்குவரத்துச் செலவினம் | 20,000 | மேற்படி |

**1.2.6 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை | |
| (i) xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 192,850 தொகை அறவிடப்பட வேண்டியவர்களிடம் இருந்து பிணையாளரிடம் இருந்து 2011 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) xxiv ஆம் அத்தியாயத்தின் 13.1 ஆம் பிரிவு | ஊழியர் ஒருவர் சேவையில் வைத்துக்கொள்வது நிச்சயமற்ற சந்தர்ப்பத்தின் போது சம்பள முற்பணங்கள் வழங்கப்படலாகாத போதிலும் அவ்வாறு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஆ) நிதிப் பிரமாணம் | |
| இல. 1646 | ஒவ்வொரு மாதத்திற்காகவும் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்புகளும் இதனை அடுத்துவரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ∴12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவு | ஆகக் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளுக்காக கூட்டங்கள் எதுவும் கூட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1999 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 22∴99 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 1.3.1(ஹை) ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் குழுப் போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டிய போதிலும் 6 உத்தியோகத்தர்களுக்கு வெவ்வேறாக வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | 1994 ஆகஸ்ட் 3 ஆந் திகதிய 26∴92(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒதுக்கப்பட்ட வாகனங்களைத் தவிர்த்து மிகுதியாகவுள்ள அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினையும் நிறுவனத்தின் பெயரும் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | ஆணைக்குழுவின் நிதி அறிவுறுத்துரைகள் இலக்கம் 1 இன் 10 ஆம் பிரிவு | முறையான மதிப்பீடுகளின்றி முற்பணங்கள் வழங்கப்படும், அதே நேரம், முன்னர் பெற்ற முற்பணத்தைத் தீர்த்துவைக்காத உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவினது செயற்பாட்டு நடவடிக்கைகளால் ரூபா 1,634,481 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 990,444 தொகையான மிகை காணப்பட்டது. இதன்

பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,624,925 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயற்திறன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திலான இலக்குகள் எய்தப்படுவதற்காக ஆணைக்குழு தவறியிருந்தது. எய்தப்படாத இலக்குகள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டிற்காக அரச துறையின் தொழிற்திறன் பயிற்சி நிறுவகத்திற்காக நிதி உதவி வழங்கப்படுவதற்காக ரூபா 9.865 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் ஆணைக்குழுவின் மூலம் ரூபா 7.374 மில்லியன் தொகை நிதி உதவியாக வழங்கப்பட்டிருந்ததுடன் நிதி உதவி வழங்கப்படும் செயற்பாடு 75மூ ஆக மாத்திரமே காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புப் பிரிவினால் தொழிற்திறன் பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக ரூபா 1 மில்லியன் தொகையான மானியம் வழங்கப்படுவதற்கு ரூபா 1 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூபா 806,143 தொகையான நிதியுதவி வழங்கப்பட்டிருந்ததுடன் இது ஆண்டிற்கான ஏற்பாட்டின் 81மூ ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் போது 204 நிறுவகங்களின் பதிவு நாளதுவரையாக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 181 நிறுவகங்களின் பதிவுகள் மாத்திரமே புதுப்பிக்கப்பட்டிருந்தன. இது இலக்கிடப்பட்ட அளவில் 88.7மூ மட்டத்தில் நிலவியது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பயிற்சிப் பாடநெறிகளின் தரப்படுத்தல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| பயிற்சி வழங்கும் நிறுவகம் | பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | தரப்படுத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகள் தரப்படுத்தப்பட்ட பாடநெறிகளின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| ----------- | ------------------- | --------------------- | ------------------ | --------------------- |
| தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை | 05 | 05 | 01 | 20% |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 06 | 06 | - | 00% |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 23 | 27 | 12 | 44% |
| இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை | 135 | 195 | 113 | 58% |
| வேறு அரச நிறுவகங்கள் | 07 | 08 | 03 | 37% |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் | 85 | 79 | 52 | 66% |

(உ) தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை பாடநெறிகளைத் தரப்படுத்துவதற்காக 5 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் 1 பாடநெறி மாத்திரமே தரப்படுத்தப்பட்டிருந்தது. இது மதிப்பிடப்பட்டிருந்த பாடநெறி எண்ணிக்கைகளின் 20% ஆகக் காணப்பட்டது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 விண்ணப்பங்கள்

மதிப்பாய்வு செய்திருந்த போதிலும் ஒரு பாடநெறியும் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தரப்படுத்தலைத் திருத்துவதற்காக 2 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் ஆணைக்குழுவினால் கடந்த ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களுடன் 10 பாடநெறிகள் நடாத்தப்பட்ட போதிலும் தரப்படுத்தல்கள் 2 பாடநெறிகளுக்கு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறி எண்ணிக்கையின் 20மூ ஆகும். இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் பாடநெறிகளின் தரப்படுத்தல்கள் மீட்கப்படுவதற்கு 60 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவினால் 33 பாடநெறிகளான 55மூ மாத்திரமே மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. பாடநெறி தரப்படுத்தலுக்காக மதிப்பிடப்படுகையில் நிர்ணயங்கள் பல பூர்த்தியாக்கப்பட வேண்டும் எனவும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமையால் மாத்திரம் பாடநெறிகள் தரப்படுத்தப்பட முடியாது எனவும் தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(எ) மீளாய்வாண்டின் போது நிறுவகங்களுக்கிடையே 9 கூட்டத்தொடர்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 7 குழுக்கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. திறன் அடிப்படை மதிப்பாய்விற்கான ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு திறன் அடிப்படை மதிப்பாய்விற்காக 10 செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 5 செயலமர்வுகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. இதில் ஒரு செயலமர்வு பயிற்சி நிலையத் தலைவர்களுக்காக என்பதும் அவதானிக்கப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் போது முகாமைத்துவத் தகவல்கள் முறைமையை நாளதுவரையாக்குவதற்காக ரூபா 300,000 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் எந்தத் தொகையும் இதற்காக செலவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

(அ) நிதியுதவி வழங்கல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய ஆண்டில் ரூபா 1,647,699 நிதி உதவி வழங்கப்பட்ட 10 தனியார் நிறுவனங்களிலும் ரூபா 5,565,474 வழங்கப்பட்ட 17 அரசாங்க நிறுவனங்களில் இருந்தும் இருதரப்பினருக்கிடையே ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிதி உதவியைப் பயன்படுத்திய விதம் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் 2010 மார்ச் 31 இல் உள்ளவாறும் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிறுவகங்களைப் பௌதீக ஆய்விற்கு உட்படுத்தப்படுவது நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) நிதி உதவி வழங்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 06 மாதங்களுக்குள் உரிய பாடநெறியை தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும் அத்தேவைப்பாடு எய்தப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராததுடன் செலவிடப்படாத பணம் மீள ஆணைக்குழுவால் மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) 2007 ஆம் ஆண்டில் 5 பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்காக ரூபா 794,010 தொகையான நிதியுதவி வழங்கப்பட்டிருந்த 03 நிறுவகங்கள் மற்றும் 2008 ஆம் ஆண்டின் போது 02 பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்காக ரூபா 79,030 தொகையான நிதியுதவி வழங்கப்பட்டிருந்த 02 நிறுவகங்களினால் 2009 ஆம் ஆண்டின் இறுதித் திகதி வரையிலும் அப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிராமை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போதும் அப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டமைக்கு எழுத்து மூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகன அணியின் பரிசோதனை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆணைக்குழுவிடம் 12 வாகனங்கள் காணப்பட்டதுடன் 6 சாரதிகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதன் பிரகாரம் 6 வாகனங்கள் முழு நேரமும் சேவையில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஆணைக்குழுவிடம் 5 வாகனங்கள் உத்தியோகத்தர்களுக்காக குழு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் வாகனங்கள் குழு போக்குவரத்திற்காக அல்லாது ஒவ்வொரு தனிநபருக்கும் வெவ்வேறாக வழங்கப்பட்டிருந்தது.

(iii) உத்தியோகத்தர்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த குழு வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் ஏனைய பதிவேடுகளின் தெரிவுச் செவ்வையின் போது 63 சந்தர்ப்பங்களில் 4,034 கிலோ மீற்றர்கள் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் சுத்திகரித்தல்

-----------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது வாகனப் பழுதுபார்த்தலுக்காக ரூபா 470,295 செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2011 ஏப்ரல் 08 ஆம் திகதியில் உள்ளவாறும் வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிதிகளின் பயன்பாடு

--------------------------------------

மீளாய்வாண்டின் போது பிரதானமான வங்கி நடைமுறைக்கணக்குகள் இரண்டில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அளவிலான காசு மீதி விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இவ் இரு வங்கிக் கணக்குகளிலும் காணப்பட்ட மாதாந்த சராசரி காசு ரூபா 3,540,743 ஆகவும் ரூபா 4,537,729 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் மிகையான தொகை நடைமுறைக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்படாது குறுங்காலம் முதலீடு செய்யப்பட்டு வருமானத்தை உழைப்பதற்கு இருந்த மாற்றீடு தொடர்பாக ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

2003 யூன் 2 ஆந் திகதிய பிஈடீ.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 பந்திகளுக்கு முரணாக 2005 ஜனவரி முதல் வாகனமொன்று தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீடு திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அத்திருத்தப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் என்பவற்றிற்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் நிலவிய குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதி நடவடிக்கைகள்
(இ) செயலாற்றல்
(ஈ) நிதி உதவி வழங்கல்
(உ) வாகனப் பாவனை
(ஊ) பதவியணி முகாமைத்துவம்